**தமிழ்நாடு கலைத்திட்ட வடிவமைப்பு 2025**

**பரிந்துரைக்கப்பட்ட வரைவுப் பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகள்**

**வகுப்பு – 9, 10 – தமிழ் - உயர்நிலை**

"புதிய பார்வையில் கல்வி" என்ற தொலைநோக்குடன் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025, சமத்துவ மற்றும் எதிர்கால ஆயத்தம் என்ற இலக்கினை அடைவதற்கு அனைத்துப் பாடங்களையும் கற்பதற்கான அடித்தளம் மொழிக்கல்விதான் என்பதை வலியுறுத்துகிறது.

தொடக்க, உயர்தொடக்க நிலைகளில் தொன்மையும் இலக்கிய, இலக்கணச் செறிவும் கொண்ட தமிழ்மொழியானது படித்துப் புரிந்துகொள்ளுதல், எண்ணங்களுடன் இணைத்துக் கருத்தை வெளிப்படுத்துதல், பிழையின்றிப் பயன்படுத்துதல் என்ற அடிப்படையில் கட்டமைக்கப்பட்டது. தொடர்ந்து உயர்நிலை வகுப்புகளில் இத்திறன்கள் விவாதித்தல், பகுத்தாய்தல், தேடித் தேர்ந்து படித்தல், விமரிசித்தல், மதிப்பிடுதல், படைப்பாற்றல், தொழில்நுட்பங்களைப் பாதுகாப்புடன் கையாளுதல் என்பதாக மேம்படுகின்றன. மேலும், இன்றைய தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஈடுகொடுப்பதாகவும் விரைவான சமூக மாற்றங்களுக்கு ஏற்ப, பல்துறை அறிவைப் பெற்றுத் தம்மைத் தகவமைத்துக் கொள்வதாகவும் உயர்நிலைத் தமிழ்மொழிப் பாடத்திட்டம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழிப் பாடத்தைப் படிக்கும் மாணவர்கள் மொழித்திறன்களைப் பெறுவதோடு 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள், வாழ்வியல் திறன்கள் மற்றும் விழுமியங்களை உணர்ந்து பின்பற்றுதல், உடனிருப்பவர்களிடம் பகிர்தல், பின்பற்ற வலியுறுத்துதல் போன்ற நெறிகள் பெறுவதையும் இப்பாடத்திட்டம் உறுதிசெய்கிறது. இது, குறிப்பாகத் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற பெருமித உணர்வுடன் மொழிப்பாடத்தை விரும்பியும் சுவைத்தும் படிப்பதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

**கலைத்திட்ட இலக்கு - 1**

கேட்டு, படித்து அறிந்தவை பற்றிச் சிந்தித்து, பகுத்தாய்ந்து, கருத்தை வெளிப்படுத்தும் விவாதிக்கும் திறன் பெறுதல். (கேட்டல், பேசுதல்)

| **திறன்** | **கற்றல் விளைவுகள்** | |
|---|---|---|
| | **ஒன்பதாம் வகுப்பு** | **பத்தாம் வகுப்பு** |
| 1.1 கேட்ட, படித்த பகுதிகளைப் பற்றிப் பேசுதல், பகுத்தறிந்து உரையாடுதல், விவாதித்தல். | இலக்கிய வடிவங்களைப் படித்துச் சுவைப்பர். இலக்கிய உத்திகளை அறிந்து **பகுப்பாய்வு செய்வர்.** (புதுக்கவிதை, நவீனக் கவிதை வடிவங்கள், மொழிபெயர்ப்புப் பகுதிகள்) (கதை – கதைக்களம், கருப்பொருள், கதைப்பின்னல், கதை வளர்ச்சி, கதை மாந்தர் இயல்புகள்) | இலக்கிய வடிவங்களைத் தெரிந்துகொண்டு நயமுணர்ந்து படித்துப் பகிர்வர். படைப்பிலக்கியக் கூறுகளை அறிந்து **பகுப்பாய்வு செய்து விவாதிப்பர்.** (செய்யுள் – பாடுபொருள், நயங்கள்) (உரைநடை – பொருள், மொழிநடை, நயங்கள்– மொழிபெயர்ப்புப்பகுதி – கலைச்சொற்கள்) |
| 1.2 கேட்ட, படித்த பகுதிகளைப் பகுத்தறிந்து மதிப்புரை செய்தல். | கேட்ட, படித்த இலக்கியங்கள் குறித்து வகுப்பறை, இலக்கிய மன்றம் போன்ற இடங்களில் **விமரிசனம் செய்வர்.** | வினாடி வினா, பொதுஅறிவுப் போட்டிகளில் கலந்து கொள்வர். விழாக்களில், **மேடைகளில் கருத்தை வெளிப்படுத்துவர்.** கேட்டவற்றை, படித்தவற்றைப் பகுத்தறிந்து **மதிப்புரை** |

TNSCERT - DRAFT SYLLABUS

| | | |
|---|---|---|
| | (சிறார் இலக்கிய நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், விருதுபெற்ற நூல்கள்) | **எழுதுவர்.** (படித்த நூல்களின் வடிவம், உத்திகள் மற்றும் கட்டமைப்பு ) |
| **கலைத்திட்ட இலக்கு - 2** பல்வேறு வடிவங்களில் (பாடல், உரை, உரையாடல், கடிதம், கட்டுரை, நாடகம், முழக்கத்தொடர், துணுக்கு, இன்ன பிற) கருத்தைப் பிழையின்றி வெளிப்படுத்தவும் அச்சு / காட்சி ஊடகங்களில் பதிவிடவும் திறன் பெறுதல். (பேசுதல், எழுதுதல், தானே கற்றல், சொற்களஞ்சியம், படைப்பாற்றல்) | | |
| 2.1 கதை, கவிதை, உரைநடை, நாடகம் வழியாகக் கருத்தை வெளிப்படுத்துதல். | கதை,கவிதை, உரைநடை, நாடகம், முழக்கத்தொடர்கள் ஆகிய வடிவங்களில் **சமூகத்திற்குத் தேவையான கருத்தை வெளிப்படுத்துவர்.** (சுற்றுச்சூழல் பாதுகாப்பு) | கடிதம், கட்டுரை, **உரையாடல், முழக்கத்தொடர், துணுக்கு, விளம்பரம்** இன்ன பிற வடிவங்கள் வழியாகச் சமூகத்திற்குத் தேவையான கருத்துகளை வெளிப்படுத்துவர். (சாலைப் பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு) |
| 2.2 தம் கருத்துகளை ஊடகங்களில் பதிவிடுதல். | சூழல்களுக்குத் தக்கவாறு ஊடகங்களுக்கு ஏற்ற மொழிநடையில் **கருத்துகளை முறையாகப் பதிவிடுவர்.** (அச்சு – இதழ்கள், சமூக ஊடகங்கள் – படப்பகிரி, முகநூல், புலனம்) | ஊடக மொழிநடைக்கு ஏற்ப, கருத்துகளைத் திரட்டி செம்மைப்படுத்தி **விளக்கிக் கூறுவர்; பதிவிடுவர்.** (செய்திமடல், அழைப்பிதழ், வாழ்த்துச் செய்தி, அறிவிப்பு, முழக்கத்தொடர், விளம்பரம்) |
| **கலைத்திட்ட இலக்கு - 3** தமிழ்மொழி இலக்கியங்களில் பொதிந்துள்ள பண்பாடு, வாழ்க்கைமுறை, மனஉணர்வு, நன்னெறிகள் போன்றவற்றைப் புரிந்துகொண்டு சுவைக்கவும் ஆராய்ந்து தேடிப்படிக்கவும் மேற்கோளாகப் பயன்படுத்தவும் திறன் பெறுதல். (கேட்டல், படித்தல், எழுதுதல், அகராதிப் பயன்பாடு, சொற்களஞ்சியப் பெருக்கம்) | | |
| 3.1 இலக்கியங்கள் காட்டும் பண்பாடு, வாழ்க்கைமுறை, மனஉணர்வு, நன்னெறிகளை ஆராய்ந்து தேடிப் படித்தல். பெருமித உணர்வு கொள்ளுதல். சுவைத்து மகிழ்தல். | இலக்கியப் படைப்புகளில் உள்ள பண்பாடு மற்றும் விழுமியங்களை அறிவியல் மனப்பான்மையோடு ஆராய்ந்து தேடிப் படிப்பர். **நயங்களைச் சுவைத்து மகிழ்வர்.** (காப்பியங்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், அறநூல்கள், இன்ன பிற.) | இலக்கியப் படைப்புகளில் உள்ள பண்பாடு மற்றும் விழுமியங்களை அறிவியல் மனப்பான்மையோடு ஆராய்ந்து தேடிப் படிப்பர். **சிறப்புகளைப் பிறருடன் பகிர்ந்து மகிழ்வர்.** (செவ்வியல் இலக்கியங்கள் காட்டும் பண்பாடு, இன்ன பிற.) |
| 3.2 இலக்கியங்கள் காட்டும் பண்பாடு, வாழ்வியல் திறன், விழுமியங்கள் ஆகியவற்றைப் பின்பற்றுதல். பகிர்தல்; மேற்கோளாகப் பயன்படுத்துதல். | இலக்கியங்கள் வாயிலாகப் பண்பாடு, வாழ்வியல் திறன், **விழுமியங்களைப் புரிந்து பின்பற்றுவர்.** | இலக்கியங்கள் வாயிலாகப் பண்பாடு, வாழ்வியல் திறன், விழுமியங்கள் ஆகியவற்றைப் புரிந்து பின்பற்றுவர். **பேச்சிலும் எழுத்திலும் மேற்கோளாகப் பயன்படுத்துவர்.** |

| | | |
|---|---|---|
| 3.3 இலக்கியப் படைப்புகளில் சொல்லப்பட்ட உணர்வுகளையும் நயங்களையும் பயன்படுத்திப் படைப்புகளை உருவாக்குதல். | இலக்கியப் படைப்புகளில் உள்ள உணர்வுகளையும் நயங்களையும் புரிந்துகொண்டு புதிய **படைப்புகளை உருவாக்குவர்.** (நகைச்சுவை, திகில், அன்பு, கருணை போன்ற உணர்வுகளைக் கொண்ட வேறுபட்ட படைப்புகள்) | இலக்கியப் படைப்புகளில் உள்ள உணர்வுகளையும் நயங்களையும் புரிந்துகொண்டு புதிய படைப்பை எழுதுவதோடு ஒத்த வயதினரின் **படைப்புகளை மதிப்பிடுவர்.** ஒரு படைப்பின் **வடிவத்தை, வேறொரு வடிவமாக மாற்றுவர்.** (உரையாடலாக, கட்டுரையாக, கதையாக, நாடகமாக, மதிப்புரையாக மாற்றுதல்.) |
| **கலைத்திட்ட இலக்கு - 4**<br>மொழியின் பயன்பாட்டு விதிமுறைகளைப் புரிந்துகொண்டு படைப்புகளில் பயன்படுத்தும் திறன் பெறுதல். (பேசுதல், எழுதுதல், பயன்பாட்டு இலக்கணம், சொற்களஞ்சியப் பெருக்கம்) | | |
| 4.1 மொழியின் பயன்பாட்டு இலக்கணத்தைப் புரிந்துகொண்டு பிழை தவிர்த்து மொழியைப் பயன்படுத்துதல். | திணை, பால், எண், இடம், காலம் போன்ற மொழியின் பயன்பாட்டு இலக்கணத்தைப் **புரிந்து படைப்புகளில் பயன்படுத்துவர்.** (உரைநடைக்குத் தகுந்த எழுத்து வழக்குச் சொற்கள்) | மொழியின் பயன்பாட்டு இலக்கணத்தை உணர்ந்து பிறமொழிச் சொற்களைத் தவிர்த்து, பிழையின்றி மொழியைப் பேசுதல், எழுதுதல் மூலம் **எதிர்காலத்தில் கிடைக்கக் கூடிய வேலைவாய்ப்புகளுக்கு ஆயத்தமாவர்.** (சொற்பொழிவு, பேச்சரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், பிழை திருத்தம், உள்ளடக்கத் தயாரிப்பு (Script Writing), நிகழ்ச்சித் தொகுப்பு.) |
| 4.2 நூலகத்தையும் இணையவளங்களையும் பயன்படுத்துவதோடு மொழிபெயர்க்கப்பட்ட இலக்கியங்களையும் படித்து உரிய கலைச்சொற்களைப் பயன்படுத்தி, படைப்புகளைச் செழுமைப்படுத்துதல். | சொலவடைகள், பழமொழிகள், வட்டார வழக்குச் சொற்கள், கலைச்சொற்கள் போன்றவற்றை அடையாளம் கண்டு **சூழலுக்கு ஏற்பப் பயன்படுத்துவர்.** நூலகம் மற்றும் இணைய வளங்களைப் பயன்படுத்திச் **சொற்களஞ்சியத்தைப் பெருக்குவர்.** (பாடிப் பாடிக் குத்தினாலும் பதரு அரிசி ஆகுமா? சொலவடைகள் – வாய்மொழி இலக்கியம்) | சொலவடைகள், பழமொழிகள், வட்டார வழக்குச் சொற்கள், பிறதுறைச்சொற்கள் மற்றும் புதிய கலைச்சொற்களைத் தம் பேச்சிலும் எழுத்திலும் **சூழலுக்கு ஏற்பப் பயன்படுத்துவர்.** படைப்புத் திறனை மேம்படுத்திக்கொள்வர். எதிர்கால வேலைவாய்ப்புக்கான **அடிப்படையைக் கட்டமைப்பர்.** (வட்டார வழக்குச் சொற்கள், பிறதுறைச் சொற்கள், கலைச்சொற்கள்) |
| **கலைத்திட்ட இலக்கு – 5**<br>மொழி நம் அடையாளம் என்பதை உணர்ந்து கற்பனை, ஆழ்ந்த சிந்தனை, மன உணர்வுகளை ஒருங்கிணைத்துப் படைப்புகளாக வெளிப்படுத்தும் திறன் பெறுதல். (கதை, கவிதை, கட்டுரை, உரையாடல், பாடல், நாள்குறிப்பு, கடிதம், செய்தி, நகைச்சுவை, மொழிவிளையாட்டு, விளம்பரம், முழக்கத்தொடர் மற்றும் அறிவிப்பு இன்ன பிற) (பேசுதல், எழுதுதல், படைப்பாற்றல், தானே கற்றல், சொற்களஞ்சியம்) | | |

| | | |
|---|---|---|
| 5.1 மொழியின் தொன்மையையும், மொழி நம் அடையாளம் என்பதையும் அறிந்தும் உணர்ந்தும் படைப்புகளில் வெளிப்படுத்துதல். | தமிழ் மொழியில் உள்ள தொன்மையும் தொடர்ச்சியும் உடைய சொற்களை அறிவர். தமிழரின் வரலாறு, பண்பாட்டு அடையாளங்களை **அறிவியல் ஆதாரங்களோடு அறிந்து பெருமிதம் கொள்வர்.**<br><br>(நெல், வரை போன்ற சொற்களின் கால வரலாறு) | மொழியின் தொன்மையை அறிந்து மொழியின்பாலும் மொழி வழங்கும் சமூகத்தின்பாலும் பெருமிதம் கொள்வர். ஆழ்ந்த **சிந்தனை, கற்பனையுடன் படைப்புகளை உருவாக்குவர்**.<br><br>(அகழாய்வு எச்சங்களில் பொறிக்கப்பட்டிருக்கும் தொன்மையான (பெயர்ச்) சொற்கள் – ஆதன், குவிரன், கோதை) |
| 5.2 தமிழ்ச் சொற்களின் பொருள் ஆழம் புரிந்து புதிய சொற்களைத் தம் மொழியில் பயன்படுத்துதல். தமிழர் பண்பாட்டினை உணர்ந்து, தற்போதிருக்கும் நிலையை மதிப்பிடுதல். | தமிழ்மொழியை, தமிழர் பண்பாட்டைப் பாதுகாக்கும் கடமை உணர்ந்து புதிய கலைச்சொற்களைப் பயன்படுத்துவர். தமிழ்மொழி இலக்கியங்களையும் **மொழிபெயர்ப்பு இலக்கியங்களையும் படிக்க ஆர்வம் கொள்வர்**. அகராதியின் உதவியோடு சிறு பகுதிகளை மொழிபெயர்ப்பு செய்வர். | தமிழ்மொழியை, தமிழர் பண்பாட்டைப் பாதுகாக்கும் கடமை உணர்ந்து பிறருக்கும் உணர்த்துவர். தமிழ்மொழி இலக்கியங்களில் உள்ள மொழிநடை மாற்றங்களை **ஆர்வத்துடன் அணுகுவர்**. புதிய கலைச்சொற்களைத் தம் பயன்பாட்டில் கொண்டுவருவர். மொழிபெயர்ப்பு நூல்களைப் படித்துத் தமிழ் நூல்களுடன் **ஒப்பிடும் ஆர்வம் கொள்வர்.** மொழிபெயர்க்கும் திறனோடு மொழிபெயர்ப்புப் பகுதியை மூலப்பகுதியோடு **ஒப்பிட்டு வேறுபாடு காணும் திறன்** பெறுவர். |

**கற்றல் அணுகுமுறைகள்**

இலகுவான கருத்துப் பரிமாற்றத்திறன், பொருள்புரிந்து படித்தல், எண்ணங்களைப் பேச்சில் எழுத்தில் வெளிப்படுத்துதல், படித்துச் சுவைத்த இலக்கியங்களின் நயம் பாராட்டுதல், இலக்கியத்தைப் படித்தல் மூலம் சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல், மொழிபெயர்த்தல், வேறுபட்ட வடிவங்களில் படைப்புகளை உருவாக்குதல், அற இலக்கியங்கள், செவ்வியல் இலக்கியங்கள் வாயிலாக நன்னெறிகளையும் வாழ்வியல் திறன்களையும் உணர்ந்து பின்பற்றுதல் போன்றவற்றிற்கென உயர்நிலையில் பின்பற்றப்படும் கற்றல் அணுகுமுறைகளாவன –

- ✓ மொழியறிவைக் கட்டமைத்துக் கற்றல் (Constructivist Approach)
- ✓ இலக்கியப் பகுப்பாய்வின் அடிப்படையில் கற்றல் ( Literary Analysis Approach)
- ✓ கலந்துரையாடல் மற்றும் விவாதித்தல் வழியாகக் கற்றல் (Discussion & Debate Method)
- ✓ பல்வேறு வடிவங்களில் எழுதுதல் வாயிலாகக் கற்றல் (Writing Workshop Method)
- ✓ வேறுபட்ட பாட வடிவங்கள் வாயிலாகக் கற்றல் (எழுத்து, பட, மின்னுரு வடிவில்) (Blended Learning Approach)

TNSCERT DRAFT SYLLABUS

- ✓ தொடர் பயிற்சி, விடையளித்தல் மற்றும் நோக்க அடிப்படையில் கற்றல் (Practice, responding and objective-based learning)

**பாடப்பொருள் –**

- ✓ உயர்நிலைப் பாடப்பொருள் மாணவர்கள் விரும்பித் தேடிப் படிக்கும் வகையிலும் பகுப்பாய்வுச் சிந்தனை, முறையான எழுத்து மற்றும் மொழியைத் திறம்படக் கையாளும் வகையிலும் அமைதல்.
- ✓ பாடப்பொருளானது முற்கால, தற்கால இலக்கியங்களை உள்ளடக்கிச் செய்யுள், கதை, கவிதை, உரைநடை, உரையாடல், நாடகம், கலந்துரையாடல், கடிதம், நாள்குறிப்பு, மொழிபெயர்ப்புப் பகுதி மற்றும் பயணக் குறிப்பு என வேறுபட்ட வடிவங்களில் வகுப்புநிலைக்கேற்ப ஈடுபாட்டுடன் பங்கேற்கும் வகையில் அளிக்கப்படும்.

**கலைகள், விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள் –**

- ✓ ஒப்படைவுகள், செயல்திட்டங்கள், களப்பயணம், நேர்காணல் போன்றவை திரட்டுதல், தொகுத்தல், பகிர்தல், போலச் செய்தல், கதை கூறுதல், நாடகம் நடித்தல், உரையாடல், கலந்துரையாடுதல், மதிப்பிடுதல் போன்றவை மூலம் கலைகள், விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள் மாணவர்களைச் சென்றடையும்.

**மதிப்பீடு**

- ✓ மாணவர்களின் தனித்திறன், செயல்பாடுகளில் வெளிப்படுத்தப்படும் மொழித்திறன்கள், பங்கேற்பு ஈடுபாடு, அறிதல், புரிதல், பயன்படுத்துதல், ஆளல் போன்ற மதிப்பீட்டுக் களங்களில் மாணவர்களின் மொழி வெளிப்பாடு, வாய்மொழியாகவும் எழுத்துவழியாகவும் செயல்திட்டம் மற்றும் செயல்பாடுகள் வாயிலாகவும் மதிப்பிடப்படும்.
- ✓ மனனத்தைத் தவிர்த்துத் திறனை மதிப்பிடுவதற்கான களங்கள் மேம்படுத்தப்படும். வகுப்பறைச் செயல்பாடுகளில் மாணவர்களின் பங்கேற்பும் ஈடுபாடும் கலை, விழுமியங்கள் மீதான அவர்களின் வெளிப்பாடும் மதிப்பிடப்படும்.
- ✓ தமிழ்மன்றங்கள், தமிழ்ப் பேச்சு, கவிதை, கட்டுரை போன்ற போட்டிகளில் பங்குபெறும் மாணவர்களின் மொழித்திறமைகளும் மதிப்பீட்டுடன் இணைக்கப்படும்.
- ✓ பள்ளி மாணவர்களுள் சிறார் எழுத்தாளராக இருக்கும் மாணவர்களுக்குக் கூடுதல் வழிகாட்டுதல் வழங்குவதுடன் பிற மாணவர்களுக்கும் எழுதுவதற்கான சூழலை வழங்குவதாக மதிப்பீடு அமையும்.

மேல்நிலைக் கல்விக்குச் செல்லும்முன் தமிழ்மொழிப் பாடங்கள் வாயிலாக மொழித்திறன்களையும் உயர்சிந்தனைத் திறனையும் தேடி விரும்பிப் படிக்கும் திறனையும் பகுத்தாய்ந்து கருத்தை வெளிப்படுத்தும் திறனையும் படைப்பாற்றலையும் வளர்ப்பதோடு தமிழ்மொழியின் தொன்மை, இலக்கிய, இலக்கணச்செறிவை உணர்ந்து பெருமித உணர்வுடன் விரும்பிக் கற்கவும் உயர்நிலைப் பாடத்திட்டம் வழிகாட்டும்.

TNSCERT DRAFT SYLLABUS